

Vol.23 | No. 6 | June 2019

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்





27 MAY 2019

DECLARATION AS PROVINCE

THUCKALAY CMC





31 MAY 2019 LITTLE FLOWER CHURCH MANJALUMOODU - MONTH OF ROSARY CONCLUSION



24 MAY 2019 BLESSING OF RENOVATED CHAPEL | BISHOP'S HOUSE



28 MAY 2019 BLESSING OF SABS CONVENT MARTHANDAM

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 23 No :06 JUNE 2019

# இறையருள்
# IRAIARUL



*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 07 |
| இறையழைத்தல் முகாம் | 07 |
| மறைக்கல்வி | 08 |
| இளையோர் இயக்கம் | 15 |
| இல்வாழ்வு இயக்கம் | 16 |
| வின்சென்ட் தே பவுல் சபை | 17 |
| சமூக சேவை சங்கம் | 19 |
| சூரியா செய்திகள் | 22 |
| திருத்தொண்டுப் பணிகள் | 22 |
| மறைவட்டச் செய்திகள் | 23 |
| Birthdays & Feastdays | 26 |
| Bishop's Engagements | 27 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250833
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/94/2019 31 May 2019

Dear and Reverend Fathers,

**Greetings from Bishop's House, Thuckalay!**

Our Eparchy is going to celebrate the youth convention on 7-9 June 2019. It is for the first time that we are organising such an event for three days. The theme that has been chosen for the convention is 'ABEL: I am my Brother's Keeper?' Rev. Fr Santhosh, Youth Director, with the help of young leaders and fathers and sisters has been preparing for this event for the last six months. The young people have organised a number of programmes such as retreats, Taizé prayer, animation programmes, etc. at parish level, Forane level and Eparchial level. On 26 May 2019, the young people organised adoration service in all the parishes for the success of this mega event. Young leaders have personally visited all the Catholic families to invite them to attend the concluding day of the convention. They have also visited all our Fathers and invited them for the programme. Through WhatsApp messages, the young people are informed of the progress of the preparation for the convention. While congratulating Rev. Fr Santhosh and his team for all these initiatives, I want to reflect with you about the theme that the young people have chosen for their convention.

The theme is perhaps one of the more thought-provoking questions in the Bible. Cain had killed his brother because God had accepted Abel's offering, but not his own (Gen 4:3-8). When the Lord inquired concerning Abel, Cain's response was: "Am I my brother's keeper?" (Gen 4:9). This is a question we would do well to ask ourselves today. Are we our brother's keeper? Do we have a responsibility to watch out for and care for one another? When one turns to the New Testament, it becomes clear that the answer is in the affirmative. In fact, there are many passages in the New Testament which emphasize our responsibilities towards others.

We become our brothers'/sisters' keepers by "loving one another" as commanded by Jesus (Jn 13:34-35; 15:12,17), as taught by St Paul (Rom 13:8; 1Thes 4:9), as instructed by St Peter (1 Pt 1:22) and as-stressed by St John (1 Jn 3:11-12, 23; 4:7,11-12; 2 Jn 5).

But how are we to express such love? The scriptures tell us:

- We are to "receive one another" (Rom 15:7)
- We are to "edify one another" (Rom 14:19)
- We are to "serve one another" (Ga 5:13)
- We are to "bear one another's burdens" (Ga 6:1-2)
- We are to be "forgiving one another" (Ep 4:32)
- We are to be "submitting to one another" (Ep 5:21)
- We are to "exhort one another" (Heb 3:12-13)
- We are to "consider one another" (Heb 10:24-25)
- We are to be "hospitable to one another" (1Pt 4:8-10)

Thus the scriptures speak to us unequivocally that we are our brothers' keepers. However, we need to evaluate our roles as our brothers' keepers. In order find out whether we have truly become keepers of our brothers and sisters, we need to ask ourselves:

- Do we receive him/her into the family of God, or ignore him/her (Rom 15:7)?
- Does he/she properly assimilated in the family life of the congregation or remain on the fringe?
- Do we edify him/her or put stumbling blocks in his/her way (Rom 14:19)?
- As individuals, are we 'body-builders,' encouraging the members of the body?
- Do we submit to him/her or arrogantly rule over him/her (Ep 5:21)?
- Do we serve him/her in love or expect him/her to serve us (Ga 5:13)?

- Do we demonstrate hospitality to him/her (1Pt 4:8-10) by visiting him/her in his/her need?

- Are we aware of the problems that our brother/sister face?

- Are we willing to bear the burdens of others?

- Are we willing to forgive our brother/sister when he/she repents?

We can keep reflecting upon this theme by asking similar questions. However, unfortunately, our human history is filled with stories of resentment and violence ending in the killing of countless innocent people. We read about family feuds, slavery, genocide and discriminatory policies that dehumanize. We can forget that the Cain and Abel story is being lived out, right now, in today's world. We live in this world and can be infected easily with its narcissistic attitudes. We are our brothers' and sisters' keepers, and the Lord will hold us accountable. As I reflect on this reading, three interconnected areas come to mind that kill our brothers and sisters.

The first is the spreading of misinformation about others; the second is not speaking up in defense of those unjustly attacked and the third is dismissing others because they are "different". We can do this as a nation. We can do this as individuals. Pope Francis reminds us that we need to focus on building bridges not walls with others. There are situations that we may not be able to correct, but we can correct our attitudes. We may have differing opinions, and there are times when we may have to defend ourselves against attack but we always need to look for and work for the common good. This holds true for us as individuals and as a nation.

Sometimes, we can adopt the mentality to "take care of our own" or to "save myself and forget the others," especially during our moments of trials. However, our own struggles can be an opportunity to have compassion and empathy for those who suffer with us and to truly understand what it means to be in solidarity with each other. As disciples of Christ, we are called to the latter. Yes, we are our brothers' and sisters' keepers. Even though we are facing our

own struggles, we are still in the position to help others who suffer from natural disasters, violence, hunger and poverty. As disciples of Christ, we have a responsibility to look out for the well-being of others around the globe both near and far. We are called to seek justice for our brothers and sisters.

What do we mean by justice? Most of us are familiar with the church's long history of charity, which many of us do so well. Charity is the immediate direct service that we offer to those in need, such as donating money, serving a meal at a local soup kitchen, or handing out blankets at a local shelter. When we speak of doing justice, we are referring to the act of changing the social, economic, and political structures that cause the injustice, like poverty and hunger. Working for justice does not always have the immediate gratification that charity does because challenging and changing social systems is a lengthy process. At times, we may never even see the fruit of our labour.

The call to charity and justice can be found in scriptures, especially in the writings of the Hebrew prophets and in the words and actions of Jesus. Based on scripture and the Church's long history and practice of caring for the poor, vulnerable, and marginalized, the Church has developed a body of teaching over the past century known as Catholic Social Teachings. This body of teaching is a guide for how we should live in society. They teach us to live in solidarity with our brothers and sisters around the world and to work for justice and the common good.

As the youth department of our Eparchy is organising the youth convention with the theme,'ABEL: I am my Brother's Keeper' we as priests must be in the forefront living out these values and teaching our Catholics how to incorporate these values in their daily lives. If we do not become keepers of our brothers and sisters, then we have missed the entire teachings of Jesus Christ which revolve around love of God and love of one's neighbour. May this celebration become a launching pad in reiterating our resolve to become helpmates of one another!

# CONCLUSION

As the missionary work in the extended territories of our Eparchy is slowly taking shape, let us become aware of the important role evangelization plays in the Church. It is not an optional add-on. It is at the very heart of what it means to be a Catholic. Yet, in spite of this clear mandate, we may still be tempted to respond to this call to evangelization by saying that "Catholics evangelize with how they live their lives, not by our words". We may even quote the words attributed to St. Francis of Assisi: "Preach the gospel at all times; use words if necessary." But this does not mean that we can choose between proclaiming and living the gospel, as if they both accomplish the same thing. Paul VI went on to explain in "Evangelization in the Modern World" the important interplay between word and witness in this way: "The Good News proclaimed by the witness of life sooner or later has to be proclaimed by the word of life. There is no true evangelization if the name, the teaching, the life, the promises, the kingdom and the mystery of Jesus of Nazareth, the Son of God are not proclaimed." Let us be enthused by these words of the saintly Pope and re-commit ourselves to the task of spreading the message of Christ in season and out of season!

With my prayers and blessings,

Yours in Christ Jesus

+ George Rajendran SDB
Bishop of Thuckalay

## Educare முகாம்

2019 மே 12 முதல் 15 வரையிலான 15 நாட்கள் educare முகாம் தக்கலை சங்கமத்தில் வைத்து கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக நடைபெற்றது. 217 மாணவர்கள் அழைக்கப்பட்டும் 142 மாணவர்களே பங்கேற்றார்கள். ஆங்கிலம் பேசுதல் மற்றும் ஒழுக்க நெறிகள் போன்றவை அவர்களுக்கு கற்பிக்கப்பட்டு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

| வரவிருக்கும் நிகழ்வுகள் - 2019 | |
|---|---|
| 1 | குழந்தை ஈசோ இயக்க ஆண்டு விழா |
| 1 | தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி ஆசிரியர்களுக்கான ஒருநாள் தியானம் |
| 5 | ஆயர் அவர்களின் துறவறவார்த்தைப்பாட்டின் வெள்ளிவிழா கொண்டாட்டம் |
| 7-9 | மறைமாவட்ட இளையோர் மாநாடு |
| 16 | மறைக்கல்வி ஆண்டுவிழா |
| 18 | குருக்களின் கூட்டம் |
| 23 | மிஷன் லீக் ஆண்டுவிழா |
| 25 | மறைமாவட்டங்களுக்கிடையேயான கூட்டம் |

# இறையழைத்தல் மாதம்

2019 ஏப்ரல் மாதம் மறைமாவட்ட இறையழைத்தல் மாதமாக அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி சிறப்பு செபங்களும் வகுப்புகளும் பெற்றோருக்கென விழிப்புணர்வு உரைகளும் நடத்தப்பட்டன. இறையழைத்தல் மாதத்தின் இறுதியாக, 'இறையழைத்தல் கண்காட்சி' மற்றும் 'இறையழைத்தல் முகாம்' என இரு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. முகாமில் 22 மாணவர்கள் பங்கேற்றனர். இம்முகாமில் பங்கேற்ற 3 பேர் இளங்குருமடத்தில் இணைந்தனர். நிகழ்வுகளை அருட்தந்தையர் ஜோஷி குளத்துங்கல் மற்றும் ஜாண் ஜோசப் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

அதன்கோடு பங்கில் பணியாற்றிய எப்.சி.சி அருட்சகோதரிகளுக்கு பிரியாவிடை சி.எச்.எப் அருட்சகோதரிகளின் வருகை

1982 முதல் அதன்கோடு மரியகொரேற்றி பங்கில் பல்வேறு நிலைகளில் பணியாற்றிய எப்.சி.சி அருட்சகோதரிகள் தங்கள் பணியை 5.5.2019 அன்று நிறைவு செய்தனர். தற்போது சி.எச்.எப் அருட்சகோதரிகள் அப்பணியை புதிதாக ஏற்றிருக்கிறார்கள். இவர்கள் தற்காலிகமாக இவர்கள் படந்தாலுமூட்டில், காமராஜ் நகரில் தங்குவார்கள். அவர்கள் தங்கும் இல்லமும் மந்திரிக்கப்பட்டது.



CATECHISM
# மறைக்கல்வி

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற் 16: 15)

**அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துகள்**

**தலைமையாசிரியர்கள் கூட்டம்**

மறைமாவட்ட மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூட்டம் ஜூன் 1 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புதிதாக பொறுப்பேற்ற குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்களின் தலைமையில் தூய ஆவிப் பாடலுடன் ஆரம்பமானது. மறைக்கல்வியின் இயக்குநராக பணியாற்றிய அருட்தந்தை சனில் அவர்களும் மறைக்கல்வியின் புதிய இயக்குநராக பொறுப்பேற்ற அருட்தந்தை பிறின்ஸ் மாலியில் அவர்களும் மறைகல்வியின் உதவி இயக்குநர் அருட்தந்தை சாஜன் அவர்களும் உடனிருந்தனர். தலைமையாசிரியர் திரு. விஸ்வநாதன் அவர்கள் அருட்தந்தையர்களையும் வருகை புரிந்த அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார்.

**வாழ்த்துரை**

அருட்தந்தை சனில் அவர்களும், தலைமை ஆசிரியர்கள் சார்பில் சோனிக் ரீகன் அவர்களும், மறைமாவட்டத்தின் புதிய குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்களுக்கும், மறைக்கல்வியின் புதிய இயக்குநர் அருட்தந்தை பிறின்ஸ் மாலியில் அவர்களுக்கும் புதிய செயலராக பொறுப்பேற்ற அருட்சகோதிரி ட்றீசா ஜோஸ் அவர்களுக்கும், 15 ஆண்டுகள் மறைக்கல்வியின் செயலராக பணியாற்றிய அருட்சகோதிரி ஜெயின் மரியா அவர்களுக்கும் வாழத்துக்கள் கூறி உரை நிகழ்த்தினர். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் தனது உரையில் 'அடுத்த தலைமுறைக்கு விசுவாசத்தை பகிர்ந்து கொடுப்பது தான் மறைக்கல்வி. நம்முடைய செயல்பாடுகள் வழியாக விசுவாசம் மாணவர்கள் மனதில் பதிய வேண்டும்' என்றும் கூறினார். இயக்குநர் அருட்தந்தை பிறின்ஸ் அவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு தர

வேண்டுமென்றும் கேட்டுக்
கொண்டார்.
மேலும் ஒவ்வொரு மறைக்கல்வி நிலையமும் ஏதாவது ஒரு ஞா-யிற்றுக்கிழமை காணிக்கை எடுத்து மறைக்கல்வி நிதிக்காக மறைக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். திருமதி ஸ்னேகலதா ஆசிரியரின் நன்றியுரையுடன் கூட்டமானது இனிதே முடிவுற்றது. இறுதியாக அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

**நன்றிகள்**

ஒரு வருடம் மறைக்கல்வி இயக்குநராக மிகச் சிறப்பாக பணியாற்றி விட்டு தற்போது புனித அல்போன்சா பங்கின் பங்குத்தந்தையாகவும் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் தாளாளராகவும் பொறுப்பேற்ற அருட்தந்தை சனில் பந்திச்சிறைக்கல் அவர்களுக்கு நற்செய்தி நிலையத்தின் மனமார்ந்த நன்றிகள். அவர் பணி மேன்மேலும் சிறக்கட்டும்.

15 வருடம் மறைக்கல்வியின் செயலராக பணியாற்றிய அருட்சகோதிரி ஜெயின் மரியா அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

**வாழ்த்துகள்**

மறைக்கல்வியின புதிய இயக்குநராக பொறுப்பேற்ற அருட்தந்தை பிறின்ஸ் மாலியில் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**இதர அறிவிப்புகள்**

- மறைக்கல்வி ஆண்டு விழா ஜூன் 16 ஞாயிற்றுக்கிழமை கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.
- மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 15 பேர் கலந்துக்கொள்ள அன்பாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- மறைக்கல்வி ஆண்டுவிழாவின் போது கலைநிகழ்ச்சிகள் நடத்த வேண்டியதன் பொறுப்பு வெவ்வேறு மறைக்கல்வி நிலையங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- வகுப்பு X, XI, XII ஆகிய மாணவர்களுக்கான தேர்ச்சி பட்டியல் வெளியிடப்பட்டது.
- 2020 விவிலிய கலைவிழா நாடகத்திற்கு ஆண்களுக்கான தலைப்பு "மேனே மேனே தேகேல் பார்சின்" (தானியேல் 5 ம் அதிகாரம்); பெண்களுக்கான தலைப்பு இறைநம்பிக்கையின்

உருவம் சூசன்னா.

- X ,XI, XII வகுப்பு மாணவர்களுக்கான மறு தேர்வு ஜூன் 23 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு படந்தாலுமூட்டில் வைத்து நடைபெறும்.
- ஜூன் 1 ஆம் தேதி நடைபெற்றக் கூட்டத்தின் போது மாணவர்களின் புள்ளி விவரப்படிவம், புதிதாக மாணவர்களை சேர்க்கும் படிவம், மற்றும் மாணவர்களின் பெயர் பிறந்த தேதி வகுப்பு அடங்கிய படிவம் என மூன்று படிவங்கள் வழங்கப்பட்டன.

## DIOCESAN LEVEL BIBLE QUIZ COMPETITION FOR STUDENTS 2018 – 2019

### STD V – BOYS

| | | | |
|---|---|---|---|
| I | Abrolin Domi TA | 17/25 | Killiyoor |
| I | Ajeesh P | 17/25 | Mangarai |
| II | Abishek M | 16/25 | Manjalumoodu |
| III | Allan Babu | 13/25 | Nagercoil |

### STD V – GIRLS

| | | | |
|---|---|---|---|
| I | Alphonsa Menora OA | 23/25 | Nagercoi |
| II | Bincy B | 22/25 | Arukany |
| III | Jenshika SL | 19/25 | Mangarai |

### STD VI – BOYS

| | | | |
|---|---|---|---|
| I | Arvin C Raj | 19/25 | Padanthalumoodu |
| II | Arun Shiju | 18/25 | Marappady |
| II | Stebin SC | 18/25 | Mukkuttukal |
| II | Navin Joseph SA | 18/25 | Palukal |
| II | Asjith SA | 18/25 | Manjalumoodu |

| | | | |
|---|---|---|---|
| III | Immanuvel Sibi | 17/25 | Nagercoil |
| III | Ashikan M | 17/25 | Kattathurai |

STD VI – GIRLS

| | | | |
|---|---|---|---|
| I | Bibisha SH | 17/25 | Nithiravilai |
| I | Remitha RA | 17/25 | Killiyoor |
| II | Ajaysha Daffini D | 16/25 | Kodukkachivilai |
| II | Jomi Amala Justin JM | 16/25 | Thuckalay |
| II | Jenisha M | 16/25 | Mangarai |
| II | Joshika SJ | 16/25 | Padanthalumoodu |
| II | Arudsha KS | 16/25 | Marappady |
| III | Benija BS | 15/25 | Vayalinkarai |
| III | Subitha S | 15/25 | Palukal |
| III | Sharin Riyo S | 15/25 | Annikkarai |

STD VII – BOYS

| | | | |
|---|---|---|---|
| I | Kishore A | 21/25 | Pilankarai |
| II | Sujith VS | 18/25 | Nithiravilai |
| III | Aswin Raj K | 16/25 | Manjalumoodu |
| III | Bershey R | 16/25 | Mangarai |
| III | Austin TM | 16/25 | Varuthattu |
| III | Pradeep Raj | 16/25 | Cheenivilai |

STD VII – GIRLS

| | | | |
|---|---|---|---|
| I | Ashlin Y | 20/25 | Mangarai |
| II | Jincy JS | 19/25 | Netta |
| III | Bershika IK | 18/25 | Nithiravilai |
| III | Bershey R | 18/25 | Kattathurai |

STD VIII – BOYS

| | | | |
|---|---|---|---|
| I | Jude Anto MJ | 14/25 | Kazhuvanthittai |
| II | Devin DA | 13/25 | Vayalinkarai |
| III | Karthik M | 11/25 | Kalluvilai |
| III | Ashman Geo | 11/25 | Nithiravilai |
| III | Jobin W Fernandas | 11/25 | Nagercoil |
| III | Jobin DA | 11/25 | Manjalumoodu |
| III | Monish M | 11/25 | Mangarai |
| III | Lijo Nimish A | 11/25 | Killiyoor |

STD VIII - GIRLS

| | | | |
|---|---|---|---|
| I | Niresha S | 24/25 | Vayalinkarai |
| II | Jigisha Vincy V | 19/25 | Malaicode |
| III | Adlin AJ | 18/25 | Nithiravilai |
| III | AdlinMary Vibi VS | 18/25 | Marappady |

STD IX - BOYS

| | | | |
|---|---|---|---|
| I | John Benish J | 19/25 | Mangarai |
| II | Johnus M Kumar | 17/25 | Vayalinkarai |
| III | Abil IJ | 15/25 | Nithiravilai |

STD IX - GIRLS

| | | | |
|---|---|---|---|
| I | Ancy Mol AH | 23/25 | Muzhucode |
| II | Benila MT | 20/25 | Killiyoor |
| II | Jenila A | 20/25 | Kattathurai |
| III | Aan Jose | 17/25 | Netta |
| III | Lara Jasmin L | 17/25 | Mangarai |

| | | | |
|---|---|---|---|
| I | Aswin Rohith SP | 20/25 | Marappady |
| II | Anstin Jeno S | 19/25 | Pilankarai |
| III | Abish Raj K | 17/25 | Malaicode |

STD X - GIRLS

| | | | |
|---|---|---|---|
| I | Abisha VA | 22/25 | Kazhuvanthittai |
| II | Jomol MP | 20/25 | Palukal |
| II | Jaya Helin J | 20/25 | Thackalivilai |
| III | Shamini | 19/25 | Manjalumoodu |
| III | Dhanisha M | 19/25 | Pilankalai |
| III | Junaitha V | 19/25 | Malaicode |

STD XI – BOYS

| | | | |
|---|---|---|---|
| I | Ajo Nimish A | 20/25 | Killiyoor |
| II | Anandh G | 17/25 | Mangarai |
| III | Jefrin Joel X | 15/25 | Pilankarai |

STD XI - GIRLS

| | | | |
|---|---|---|---|
| I | Jincy C | 23/25 | Mangarai |
| I | Anchu RS | 23/25 | Vayalinkarai |
| II | Lekha RS | 21/25 | Nithiravilai |
| III | Linju LL | 20/25 | Manjalumoodu |

STD XII – BOYS

| | | | |
|---|---|---|---|
| I | Abishin Rohith SP | 12/20 | Marappady |
| I | Abimalek SJ | 12/25 | Malaicode |
| II | Arun Xavier J | 9/25 | Annikkarai |
| II | Alwin R | 9/25 | Mangarai |
| II | Nivin GV | 9/25 | Mukkuttukal |
| II | Ajith SS | 9/25 | Arukany |
| II | Albert Raj D | 9/25 | Varuthattu |
| III | Jenish F | 8/25 | Manjalumoodu |
| III | Jenil Raj R | 8/25 | Padanthalumoodu |
| III | Ajith Raj PR | 8/25 | Nithiravilai |

STD XII - GIRLS

| | | | |
|---|---|---|---|
| I | Anusha M | 18/20 | Mangarai |
| II | Asha SB Clare | 17/20 | Karode |
| III | Anisha N | 16/20 | Thackalivilai |
| III | Juno Reshmi JK | 16/20 | Vayalinkarai |

அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்

இயக்குநர்

## மறைமாவட்ட கூரியா

மறைமாவட்டத்தின் குருகுல முதல்வராக கடந்த ஆறு ஆண்டுகள் பணியாற்றிய பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும், பொருளராக பணியாற்றிய அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்களும் தத்தமது பணிகளை நிறைவு செய்தனர். அவர்களுக்குப் பதிலாக, பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் குருகுலமுதல்வராகவும் பேரருட்தந்தை குரியாக்கோஸ் அறக்காப்பறம்பில் அவர்கள் பொருளராகவும் பணியாற்றுவார்கள்.

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

இளையோர் மாநாட்டிற்கான ஆயத்தங்கள் பல்வேறு நிலைகளில் மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்டன.

**மாநாட்டிற்காக பங்குவாரியான சிறப்பு செபம்**

மறைமாவட்டத்தில் பல்வேறு பங்குகளைச் சார்ந்த இளையோர் அனைவரும் 26.05.2019 அன்று செபநாளாக அனுசரித்தனர். அன்றைய தினம் இளையோர்கள் மாலை 4 மணிமுதல் 8 மணிவரை இதை மேற்கொண்டனர். அவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து வீடு வீடாகச் சென்று சங்கிலி செபமாலை செபித்தனர். அவ்வேளையில், இளையோர் தினத்தின் இறுதி நாளில் பங்கேற்பதற்கான அழைப்பையும் வைத்தனர். இறுதியில் பங்கில் வந்தடைந்து ஒரு மணி நேர செபத்தை நடத்தினர்.

**மஞ்சாலுமூடு அலகு சந்திப்பு**

19.05.2019 அன்று மஞ்சாலுமூடு அலகு இயக்கநர் தந்தை அவர்களால் சந்திக்கப்பட்டது. அப்போது, இளையோர் மாநாட்டில் பங்கேற்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டதோடு, இதர உறுப்பினர்களையும் மாநாட்டில் பங்கேற்க வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டது.

**தன்னார்வத் தொண்டர்களுக்கான கூட்டம்**

இளையோர் மாநாட்டின் தன்னார்வத் தொண்டர்களுக்கான கூட்டம் 12.05.2019 அன்று கல்லுவிளையில் வைத்து நடைபெற்றது. இதில் 50 க்கும் மேற்பட்ட இளையோர்கள் பங்கேற்றார்கள். இளையோர் மாநாட்டின் முதல் நாள் நடைபெறும் நடனப்போட்டியைக் குறித்து விவாதித்ததோடு கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கான மும்முரமான பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

**இளையோர் மாநாட்டிற்கான பயிற்சிகள்**

மறைவட்ட வாரியாக, பல்வேறு கலைநிகழ்ச்சிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதற்கான பயிற்சிகள் மறைவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வைத்து நடைபெற்றன. பயிற்சிகளை மறைமாவட்ட இளையோர்களே அளித்தார்கள்.



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**மதுஅடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் அளிக்கப்பட்டு வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கள்கிழமைகளில் மதியம் 12.30 மணியளவில் மன நல மருத்துவர் வருகை புரிகிறார். மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம். இம்மையத்திலிருந்து சிகிட்சை பெற்ற பலர் நலமடைந்துள்ளனர். இம்மையம் இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அடிகளார் தலைமையில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கொருமுறை மூன்றாவது வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில் நடைபெறுகின்றது. அடுத்த பயிற்சி வகுப்பு ஜீன் மாதம் 14, 15, 16 ஆகிய மூன்று நாட்களும் சங்கமத்தில் வைத்து வெள்ளி காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து பயிற்சியின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணிக்கு பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெறும். பயிற்சி கட்டணம் ரூ. 750 ஆகும்.

**அருட்தந்தை அஜீஷ்**
**இயக்குநர்**

## புதுப்பிக்கப்பட்ட ஆயர் இல்ல சிற்றாலய அதிதூயகம் மந்திரிப்பு

அருட்தந்தை தங்கச்சன் கொல்லப்பள்ளி சச அவர்களின் முயற்சியின் பலனாக, புதுப்பிக்கப்பட்ட ஆயர் இல்ல சிற்றாலய அதிதூயகம் 24.05.2019 அன்று மந்திரிக்கப்பட்டது.




# தக்கலை மத்திய சபை

**மத்திய பேரவை ஆண்டுவிழா**

தக்கலை மத்திய பேரவையின் 21 ஆவது ஆண்டு விழா, கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில்வைத்து 26-5-2019 ஞாயிறு அன்று நடந்தது. நிகழ்வானது காலை 9 மணிக்கு அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற திருப்பலியுடன் தொடங்கியது. திருப்பலிக்கிடையே வின்செந்தியர்களுக்கான சிறப்பு காணிக்கை பவனி நடைபெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து திருவிவிலிய பவனி ஆலயம் முதல் ஜெயமாதா பள்ளி வரை நடந்தது.தேனீர் இடைவேளையைத் தொடர்ந்து மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஆண்டுவிழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தின் தொடக்கமாக படந்தாலுமூடு வட்டாரசபை சார்பில் தொடக்க ஜெபமும்மத்திய பேரவை சபைத்தலைவர் சகோ. ஜய்யாத்துரை அவர்களின் வரவேற்புரையும் செயலர் சகோ எட்விட்சன்அவர்களின் ஆண்டறிக்கையும் இடம்பெற்றன. பொதுக்கூட்டத்தின் போது, சபையின் மூத்த துணைத்தலைவர் சகோ. சவுந்தர் ராஜ் அவர்கள், கடந்த ஐந்து ஆண்டுகளாக மத்தியபேரவையின் ஆன்மீக ஆலோசகராக பணியாற்றிய பேரருட்தந்தைஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களுக்கு நன்றி கூறியதோடு, புதிதாக மத்திய சபையின் ஆலோசகராக பொறுப்பேற்றிருக்கும் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்களுக்கு வரேவேற்பும் வாழ்த்தும் கூறினார்.பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தமது உரையின் போது, "நாம் இவ்வுலகிலிருந்து பிரியும் போது, நாம் உலகில் செய்த நன்மைகளைத் தவிர வேறு எதுவும் விட்டுச் செல்ல இயலாது. ஆகவே நன்மை செய்து வாழ்வோம் அதற்கு புனித வின்சென்ட் தே பவுல் சபை உதவட்டும். " என்று கூறினார். இணைந்து பணியாற்றுவதன் முக்கியத்துவத்தைக் குறித்துப் பேசிய பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள், "வின்செந்திய இயக்கம் அதற்காக கடவுள் தந்திருக்கும் வாய்ப்பு என்பதை மனதில் கொள்வோம்" என கேட்டுக்கொண்டார். துறவற வாழ்வில் வெள்ளி விழா கண்ட ஆயர் அவர்களுக்கு நினைவு பரிசை மூத்த உறுப்பினர் சகோ தேவராஜ் அவர்களும் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும் வழங்கினர்.வின்செந்திய சபையின் முன்னாள் உறுப்பினரும்

முன்னாள் திட்ட அலுவலருமான சகோ தேவராஜ் அவர்கள், தன்னலமின்றி பணியாற்றும் உறுப்பினர்களை வாழ்த்திப் பேசினார். சபையின் பணியில் வெள்ளிவிழா காணும் உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசும், 9 பேருக்கு கல்வி உதவித்தொகையும் வழங்கி தலைமையரையாற்றிய ஆயர் அவர்கள் கிளைச்சபையில் இளையோரை அதிகம் சேர்க்க வேண்டும் என்றும் பொறுப்புக்களை புதியவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும்,புதிய ஆன்மீக ஆலோசகரின் ஆலோசனையும் பெற்றுச் சிறப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். ஆண்டுவிழாவின் பொதுக்கூட்டத்தினிடையே நித்திரவிளை வட்டார சபையின் சார்பில் நடனம் நடைபெற்றது. இறுதியாக, மஞ்சாலுமூடு வட்டார சபையினரின் செபம் நடைபெற்றது. நிகழ்வைசூசைபுரம் வட்டார சபைத்தலைவர் சகோ. சோனிக்ரீகன் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் 250 க்கும் மேற்பட்ட வின்சென்தியர்கள் பங்கேற்றார்கள். ஆண்டுவிழாவுக்கான ஏற்பாடுகளை கிறிஸ்துராஜபுரம் பங்குத்தந்தை லின்ஸ்லால் மங்கலத்து அடிகளாருடன் கிளைச்சபையினர் மிகச்சிறப்பாக செய்திருந்தனர். உதவிய அனைவருக்கும் குறிப்பாக எம்.எம்.எம் அருட்சகோதிரிகளுக்கும் மத்திய சபை சார்பில் நன்றிகளை காணிக்கையாக்குகிறோம்.

**சாஜன்**

## நோய்த்தணிப்பு நல்வாழ்வு நிலையம்

நோய்த்தணிப்புப் பணிகள் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் பகுதியாக, திட்டங்கனாவிளையில் உள்ள எ.எஸ்.எம்.ஐ அருட்சகோதரிகளின் கண்காணிப்பின் கீழ் நல்வாழ்வு நிலையம் அங்கே தொடங்கப்பட உள்ளது. இந்நிலையில் செப்டம்பர் மாதத்தில் செயல்பட ஆரம்பிக்கும்.

## சி.எம்.சி சாவறா துணை மாகாணம் மாகாணமாக உயர்த்தப்பட்டது

சி.எம்.சி அருட்சகோதரிகளின் 24 ஆவது மாகாணமாக சாவறா பெயரில் உதயமானது. இதன் அதிகாரபூர்வ தொடக்கம் 2019 மே 27 அன்று தக்கலையில் அமைந்துள்ள தலைமை இல்லத்தில் நடைபெற்றது.

## மறைமாவட்ட வெள்ளிவிழா தொடக்கம்

2021 ஆம் ஆண்டு கொண்டாட இருக்கும் மறைமாவட்ட வெள்ளிவிழாவுக்கான தொடக்க விழா இவ்வாண்டு ஜூன் 30 ஆம் தேதி நடத்தப்படும்.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

Kanyakumari Social Service Society

"The Palliative Care Journey - Walking to Gather"

படுக்கை நோயாளிகளுக்கு அளிக்க வேண்டிய சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் The Palliative Care Journey Walking to Gather"எனும் விழிப்புணர்வு கருத்தரங்கு கல்லுவிளை ரிரிஷிஷிஷி அரங்கத்தில் வைத்து மே மாதம் 3 ம் தேதி நடைபெற்றது. இக்கருத்தரங்கைத் தக்கலை மறைமாவட்ட குருகுலமுதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் குத்து விளக்கேற்றி துவங்கி வைத்தார்கள். முதல் அமர்வை திருவனந்தபுரம் 'பாலியம் இந்தியா' தலைவர் பத்மஸ்ரீ Dr. M. R ராஜகோபால் அவர்கள் 'படுக்கை நோயாளிகள் எதிர் கொள்ளும் சவால்கள்' என்னும் தலைப்பின் கீழ் நடத்தினார். அவர் பேசுகையில்" நோய்த்தணிப்பு சேவை, அனைத்து சேவைகளின் மணிமகுடமாக விளங்குகிறது. இச்சேவையானது சாதி மதங்களைத் தாண்டி அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று கூறினார். மேலும் அவர் தம் அமர்வில், "இச்சேவையை மேற்கொள்ளத் தன்னார்வத் தொண்டர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும், பணம், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இச்சேவைக்கு அவசியமாய் இருப்பதால் இவை அதிகமாக கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அப்போது இப்பணியை எளிதாக முன்னெடுத்துச் செல்ல முடியும்" என்றார். இரண்டாவது அமர்வை படுக்கை நோயாளிகளின் அமைப்பின் தலைவர் மற்றும் திருச்சி சுதர்சனா மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மோகன சுந்தரம் அவர்கள் "படுக்கை நோயாளிகளை மேலாண்மை செய்தல்" என்னும் தலைப்பின் கீழ் நடத்தினார். அவர் தம் உரையில், "ஒருவர் மன அமைதியுடன் மகிழ்ச்சியாக இறக்க வேண்டும்" என்று கூறினார். மேலும் அவர் தமது பணிகளைப் பற்றி விவரிக்கையில், "சுதர்சனா அமைப்பானது அரசின் உதவியோடு வீட்டிலிருக்கும் படுக்கை நோயாளிகளுக்கு மருத்துவ உதவியும் தனிமையில் இருப்பவர்களுக்கு அன்பு, அரவணைப்பு, மனரீதியான ஆதரவு, ஆன்மிக வழிகாட்டல் போன்றவை வழியாக சேவையைச் செய்கிறது" என்று கூறினார். இறுதி அமர்வானது கன்னியகுமரிசமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை சஜி எலம்பாசேரி தலைமையில் நடைபெற்றது. புனித அன்னைத் தெரசா நோய்த்தணிப்பு சேவை தொடங்கப்பட்டதன் நோக்கம்

மற்றும் அதன் இப்போதைய நிலைக் குறித்து விளக்கமாக பேசினார். அவர் தம் உரையில், "கன்னியகுமரிசமூக சேவை சங்கம் சார்பில் 30-1-2016 அன்று புனித அன்னை தெரசா நோய் தணிப்பு பாதுகாப்பு நிவாரணம் என்ற அலகு தொடங்கப்பட்டது" என்னும் விபரத்தை அளித்த அவர், "'சிறுதுளி பெருவெள்ளம்' என்னும் கூற்றிற்கிணங்க, சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் சேமிப்பின் ஒரு பகுதியிலிருந்து ஒரு வாகனம் வாங்கப்பட்டது" என்றார். மேலும் அவர் கூறுகையில், "முதலில் அருட்சோதரி வினீதா அவர்களின் தலைமையில் களப்பணியாளர்களின் உதவியுடன் புள்ளிவிபர சேகரிப்பு நடைபெற்றது. இதில் எய்ட்ஸ், சர்க்கரை மற்றும் இரத்தஅழுத்தம் என பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருக்கும் 600 க்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். அவர்களுள் 220 பேர்கள் மதர் தெரசா நோய்த்தணிப்பு சேவையைப் பெறத் தொடங்கினர். மருத்துவ உதவி, தனிமை மற்றும் அச்சத்தைப் போக்க ஆன்மீக ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகிறது. வாரத்தில் 5 நாள்கள் நோயாளிகளின் வீட்டிற்குச் சென்று சேவை செய்து வருகின்றோம்" என்றார். மேலும், 'இருகரம் கூப்பி கடவுளை வணங்குவதை விட ஒரு கரம் நீட்டி உதவி செய். இருகரமும் உன்னை வணங்கும் கடவுளாக' என்னும் சொற்றொடர் இச்சைவேயின் வழியாக செயலாக்கம் பெறுகிறது' என்ற அவர், "இதில் தன்னார்வத்துடன் செயல்படும் பணியாளர்கள் உள்ளனர் எனவும், இப்பொழுது மருத்துவ தேவைகளுக்காக Bucket collection வழியாக சேமிப்பு நடைபெற்று வருகிறது" எனவும் தன் அனுபவத்தையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார். இந்த நிகழ்வில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை எபின், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சேவை சங்கங்களைச் சேர்ந்த இயக்குநர்கள், பணியாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்.

**பணிபிரியாவிடை மற்றும் பணியேர்ப்பு விழா**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் துணை இயக்குநராக இருந்த அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் மாற்றமாகிச் செல்வதால், மே மாதம் 10 ஆம் தேதி பிரிவு உபச்சாரம் அளிக்கப்பட்டது. அவரது இடத்தில், நியமனம் பெற்றுள்ள அருட்தந்தை எபின் அவர்களுக்கு அன்றைய தினம் வரவேற்பும் அளிக்கப்பட்டது. களப்பணியாளர்களாக

பணியாற்றிய திருமதி நேவிசாள், திருமதி. பிலோமினாள், திருமதி செல்வி, திருமதி மேரி ஏஞ்சல், திருமதி சுபத்திரா, திருமதி. மரிய புஷ்பம் ஆகியோர் தங்களுடைய பணிக்காலத்தை நிறைவு செய்வதை முன்னிட்டு அவர்களுக்கு பிரியா விடை அளிக்கப்பட்டது. இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பசேரி அவர்கள் அவர்களை வாழ்த்தி ஆசி கூறினார்.

**அருட்தந்தை சஜி எலம்பசேரில்**

## பெந்தக்கோஸ்து விழா

ஜூன் 09, 2019 அன்று பெந்தகோஸ்து விழா நாம் சிறப்பிக்கிறோம். இவ்விழாவை கொண்டாட சில பரிந்துரைகள் முன்வைக்கப்படுகிறது.

- ஆண்டவரின் விண்ணேற்றம் தொடங்கி பெந்தக்கோஸ்து திருவிழாவரையிலான 10 நாட்கள் தயாரிப்பு. திருப்பலி, நவநாள், திருப்பலிக்கு முன் அரை மணி நேர ஆராதனை என இதை வடிவமைக்கலாம்.
- ஜூன் 7 ஆம் தேதி தூய ஆவியை மையமாகக் கொண்ட சிறப்பு ஆராதனை நடத்துதல். விழிப்பு செபம் நடத்துதல் சிறந்தது. அதே நாள் சீனாய் இல்லத்தில் வைத்து நடைபெறும்
- விழிப்பு செபத்தில் பங்கேற்க பங்கு மக்களை ஊக்குவித்தல்.
- ஜூன் 9 ஆம் தேதி ஆடம்பரமான திருப்பலியை நிறைவேற்றுதல்.

## இளங்குருமடம்

இளங்குருமடத்தில் 6 சகோதரர்கள் ஜூன் 15 ஆம் தேதி நுழைவார்கள். இவ்வாண்டு 12 குருமாணவர்களும் 3 அருட்தந்தையர்களும் குருமடத்தில் இருப்பார்கள்.

## இளையோர் மாநாடு

தக்கலை மறைமாவட்ட இளையோர் மாநாடு 2019 ஜூன் 7–9 வரை சூசைபுரம் அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெறும்.

## எஸ்.ஏ.பி.எஸ் அருட்சகோதரிகளுக்கு மார்த்தாண்டத்தில் புது இல்லம்

மார்த்தாண்டத்தில் நடைபெறும் திருத்தொண்டுப் பணிகளில் எஸ்.ஏ.பி.எஸ் அருட்சகோதரிகள் 2010 முதல் உதவி வருகிறார்கள். அவர்கள் தற்போது மார்த்தாண்டம் பகுதியில் ஒரு வீடு வாங்கி அதைப் புதுப்பித்து இல்லத்தை அமைத்திருக்கிறார்கள். இதன் மந்திரிப்பு 28.05.2019 அன்று நடைபெற்றது.

## சூரியா சம்மந்தமான செய்திகள்

- குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் அருட்தந்தையர்கள் மற்றும் கன்னியர்கள் சம்மந்தமான காரியங்களைக் கவனிப்பார். அவரே, அனைத்து மறைமாவட்ட மேய்ப்புப்பணித் துறைகளையும் கவனிப்பார். மறைமாவட்டத்தின் முக்கிய நிகழ்வுகளையும் அவரே ஒருங்கிணைப்பார். மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்டப் பகுதிகளின் மேற்பார்வையும் இவரின் கீழ் வருகிறது.
- அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் மறைமாவட்டத்தின் ஆவணங்களின் பொறுப்பை வகிப்பார். அத்தோடு மேய்ப்புப்பணி சார்ந்த காரியங்களை பங்குகளுக்கும் கன்னியர் இல்லங்களுக்கும் அவரே தெரி-விப்பார்.
- பொருளர் தந்தை குரியாக்கோஸ் அறக்காப்பறம்பில் அவர்கள், குருக்களின் மருத்துவம் சார்ந்த தேவைகளைப் பார்த்துக்கொள்வார். மேலும் மறைமாவட்டத்தின் அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் பொறுப்பையும் வகிப்பார்.

## விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் திருத்தொண்டுப் பணிகள்

- திருநெல்வேலியில் எஸ்.எ.பி.எஸ் அருட்சகோதரிகள் நோய்த்தணிப்பு சேவையை 2019 ஜூன் 15 ஆம் நாள் தொடங்க இருக்கிறார்கள்.
- தூத்துக்குடி கயத்தாறில் எப்.சி.சி அருட்சகோதரிகள் தங்கள் பணிகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.
- இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் திருத்தொண்டுப் பணியை மேற்கொள்ள பாலா மறைமாவட்டம் முன்வந்துள்ளது. அருட்தந்தை தோமஸ் மூலேச்சாலில் அவர்கள் 3.6.2019 அன்று நமது மறைமாவட்டத்திற்கு வருவார்கள்.
- சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்டம் அருட்தந்தை பீட்டர் கிழக்கேயில் அவர்களை, விருது நகர் மாவட்டத்தில் பணியாற்றுவதற்காக அனுப்பி இருக்கிறது. இவர் தேனி மற்றும் மதுரை மாவட்டங்களையும் கவனிப்பார்.
- தக்கலை சி.எம்.சி அருட்சகோதரிகள் அம்பாசமுத்திரம், ஆம்பூரில் கன்னியர் இல்லம் மற்றும் முதியோர் இல்லம் ஆரம்பிப்பதற்கான கட்டடப்பணிகளைத் தொடங்கி உள்ளது.
- இரிஞ்ஞாலக்குடா மறைமாவட்டம் தூத்துக்குடிப் பகுதியில் பணியாற்ற முன்வந்துள்ளது.




# சூசைபுரம் மறைவட்டம்

## பாலப்பள்ளம்: பிரிவு உபசாரம் மற்றும் வரவேற்பு

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் பணியாற்றி வந்த அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்களுக்கு 19-5-2019 அன்று பிரியா விடை அளிக்கப்பட்டது. நடைபெற்ற பிரியா விடை நிகழ்வின் போது, திரு ஜய்யாத்துரை, திரு ஜஸ்டின் திரு எட்வின்சன் ஆகியோர் அருட்தந்தையை வாழ்த்திப் பேசினர். திருமதி குளோரி அவர்களும் சிறுமி ஒருவரும் வாழ்த்திப்பாடினர். பங்கு மக்கள் சார்பில் அருட்தந்தைக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

22-5-19 அன்று, பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் மறைக்கல்வியின் தலைமை ஆசிரியையாக பணிபுரிந்து மாற்றலாகிச் செல்கின்ற அருட்சகோதரி லிற்றி அவர்களுக்கு பிரிவு உபசார விழா நடத்தப்பட்டது.

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் பங்கு தந்தையாக பணியேற்க இருந்த அருட்தந்தை ஜான் பால் அவர்களுக்கு 24.5.2019 அன்று காலையில் 10 மணிக்கு பங்கு மக்கள் சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். கைக்காரர்களான திரு ரெத்தினமணி திரு அருள் ஆகியோர் பூ கொடுத்தனர். இந்நிகழ்வில் உறவியத் தலைவர்கள் மற்றும் பங்கு மக்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். அன்று மாலை அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்களை வழியனுப்புதல் நிகழ்வும் நடைபெற்றது. மறைவட்ட பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆன்றணிஜோஸ் அவர்கள் தலைமையில் ஜெபவழிபாடும் தந்தை அவர்களின் வாழ்த்துரையும் இடம் பெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை ஜோஸ்பின், அருட்தந்தை ஜேம்ஸ் கானகாலில் அருட்தந்தை சுபின்கரியா, அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் உடனிருந்தனர்.

29-5-2019 அன்று அருட்தந்தை ஜாண்பால் தலைமையில் மழலையர் பள்ளி

ஆசிரியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. 24-5-2019 அன்று மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டமும் நடைபெற்றது.

கிள்ளியூர் புனித தேவமாதா ஆலயம் பிரிவு உபச்சார விழா மற்றும் பொறுப்பேற்பு

10-5-2019 அன்று ஞாயிற்றுக்கிழமை அருட்சகோதரர் அஜின் அவர்களுக்கு உபச்சாரவிழா நடைபெற்றது. பங்குத்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் வாழ்த்தி பேசினர். 25-5-2019 அன்று அருட்சகோதரி எல்சிட் அருட்சகோதரி ராணிமரியா ஆகியோருக்கு பிரிவு உபச்சாரவிழா நடைபெற்றது. அவர்களை பங்குத்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் வாழ்த்திப் பேசி நினைவுப்பரிசும் வழங்கினார். அருட்சகோதரி மார்கிரட் அவர்கள் கிள்ளியூர் புனித தேவமாதா ஆலயத்தில் புதிய பெறுப்பேற்றார்.

## விடுமுறை விவிலிய பியிற்சி விழா

கிள்ளியூர் பங்கில், 28-4-2019 முதல் 5-4-2019 வரை விசுவாசப்பயிற்சி விழா நடைபெற்றது. அருட்சகோதரர் ஷிஜின் தேவ் அவர்கள் வழிநடத்தினார்கள். 4-5-19 அன்று அரை நாள் சுற்றுலாவாக கன்னியகுமரிக்குச் சென்றனர்.

## மாங்கரை புனித வியாகப்பர் ஆலயம்

விடுமுறை விசுவாச பயிற்சி விழா 28-4-2019 முதல் 6-5-2019 வரை நடைபெற்றது. இவ்விழாவை பங்குத்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் தொடங்கி வைத்தார். விசுவாசப் பயிற்சிக்கு அருட்சகோதரர் ஆல்வின்ஜோஸ் அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள். 6-5-2019 அன்று விசுவாச பயிற்சியின் பகுதியாக ஒருநாள் சுற்றுலா திருவனந்தபுரத்திற்கு மேற்கொள்ளப்பட்டது. 12-5-2019 அன்று இளைஞர்களின் உணவு திருவிழா நடைபெற்றது. 20-5-2019 அன்று அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் தலைமையில் பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது.

## சூசைபுரம் வட்டார குமரி வின்செந்திய போட்டிகள்

12-5-2019 அன்று சூசைபுரம் வட்டார சபை அளவிலான குமரி வின்செந்திய போட்டிகள் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் மதியம் 2 மணிக்கு நடைபெற்றது. சூசைபுரம் வட்டார சபைக்குட்பட்ட கிளைச்சபைகளிலிருந்து பல்வேறு வயதைச் சார்ந்த போட்டியாளர்களும் சிறப்புடன்

பங்கேற்றனர். சூசைபுரம் வட்டார சபையின் துணைத்தலைவர் சகோ. லாறன்ஸ் அவர்கள் போட்டிகளை முன்னின்று நடத்தி வைத்தார். வட்டார சபை தலைவர் சகோ. சோனிக் ரீகன் தலைமையில் அனைத்து பொறுப்பாளர்களும் கலந்துக் கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு வட்டார சபையின் ஆண்டுவிழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

# மஞ்சாலுமூடு மறைவட்டம்

## களியல் புனித மரியன்னை ஆலயம்

செபமாலை கொண்டாட்டம் 1.5.2019 முதல் 30.5.2019 வரை ஆடம்பர செபமாலை கொண்டாட்டம் நடைபெற்றது. தினமும் மாலை 5.30 மணிக்கு செபமாலை, புகழ்மாலை, திருப்பலி நேர்ச்சை என இந்நாட்கள் சிறப்பிக்கப்பட்டன.

## விசுவாசப் பயிற்சி விழா

விசுசவாசப் பயிற்சி விழா 27.04.2019 முதல் 3.5.2019 வரை நடைபெற்றது. இறுதி நாள் அன்று விசுவாசப் பேரணி நடைபெற்றது. மாணவர்கள் அனைவரும் சுற்றுலாவாக ஹேப்பி லேண்ட் அழைத்துச் செல்லப்பட்டனர்.

# நித்திரவிளை மறைவட்டம்

**விசுவாசப் பயிற்சி விழா** - ஜெயமாதா ஆலயம் நித்திரவிளை 5-5-2019 முதல் 13-5-2019 முடிய 9 நாட்கள் விசுவாச பயிற்சி விழா மிக சிறப்பாக நடைபெற்றது. பேரருட்தந்தை சனில் அவர்கள் மேற்பார்வையின் கீழ் அருட்சகோதரர் ஜோர்ஜ் குட்டி அவர்கள் வழிநடத்தினர். ஒவ்வொரு நாளும் திருப்பலியுடன் நிகழ்வு ஆரம்பித்தது. வகுப்புகள், ஆடல், பாடல், கதை மற்றும் விளையாட்டு என்று பிள்ளைகள் விசுவாச மழையில் நனைந்தனர். இறுதி நாள் விசுவாச பேரணி நடத்தப்பட்டது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

## புனித அந்தோணியர் ஆலயம் வயலின்கரை

29-4-2019 முதல் 4-5-2019 முடிய 7 நாட்கள் விசுவாச பயிற்சி விழா மிக சிறப்பாக நடைபெற்றது. விழாவை பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் திருப்பலி நிறைவேற்றித் தொடங்கி வைத்தார். அருட்சகோதரர் அனில்

ஆன்றணி அவர்கள் தலைமையில் காலை 7 மணிமுதல் மதியம் 12 மணி வரை வகுப்பு, ஆடல், பாடல், கதை, விளையாட்டு என்று இந்நாட்கள் மலர்ந்தன. இதன் நிறைவாக 13 ம் தேதி திருப்பயணமும் மேற்கொண்டனர்.

## புனித சவேரியர் ஆலயம்

## வாறுதட்டு

30-4-2019 முதல் 5-5-2019 முடிய 6 நாட்கள் விசுவாச பயிற்சி விழா மிக சிறப்பாக நடைபெற்றது. 21-5-2019 அன்று 15 மாணவர்களுக்க புதுநன்மை வழங்கப்பட்டது.

தகவல்: திருமதி செலின் மேரி|திருமதி ஸ்னேக லதா|திருமதி ஹேமா

## BIRTHDAYS & FEASTDAYS OF REV FATHERS

| FEAST DAYS - JUNE | |
|---|---|
| Justin Sutheesh | 01 |
| Antony Jose | 13 |
| Antony Chundelikkat | 13 |
| Antony Madapurackal | 13 |
| Aneesh Cheruparampil | 29 |

| BIRTH DAYS - JUNE | |
|---|---|
| Anil Raj Dominic | 02 |
| Johnsilal Arackaparampil | 03 |
| Justin Cheruvelil | 04 |
| Jins Pulingappallil MCBS | 11 |
| Anoop Karingadu MCBS | 13 |
| Clement Rockey | 15 |
| Sajan Nettaponghu | 21 |
| Reju Puthuparampil MCBS | 23 |
| Mijo Puthenpurayil | 25 |

# BISHOP'S ENGAGEMENTS JUNE 2019

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 10.00 am | Psychology Graduation |
| | | 11.30 am | Kalluvilai: Tamil and English medium Teachers' Recollection |
| 2 | Sun | | Bishop's House |
| 3 | Mon | | Bishop's House \| Visit to Minor Seminary |
| 4 | Tue | | Bishop's House: Meeting with Mission Procures |
| 5 | Wed | 09.00 am | Kalluvilai : Diocesan Pastoral Council |
| | | 09.30 am | Kalluvilai : Bishop's Silver Jubilee Thanksgiving Holy Qurbana of First Profession |
| 6 | Thu | 02.00 pm | Bishop' House: Meeting with Correspondents of English medium schools |
| | | 04.00 pm | Bishop's House: Meeting with Local Managers of Tamil Medium Schools |
| 7-9 | Fri-Sun | | Soosaipuram : TCYM Youth Convention |
| 10 | Mon | | Bishop's House |
| 11 | Tue | 6am | Bishop's House: one day adoration, praying for mission Ad Gentes |
| | | 6pm | Bishop's House : Eparchial Curia Meeting |
| 12 | Wed | | Bishop's House |
| 13 | Thu | | Visit of Fr. Mark Hyde sdb, USA |

| | | | |
|---|---|---|---|
| 14 | Fri | | Bishop's House |
| 15 | Sat | | Minor Seminary: Arrival of new brothers |
| 16 | Sun | 02.00 pm | Kalluvilai : Catechism Annual Day |
| 17 | Mon | | Bishop's House |
| 18 | Tue | | Sangamam : Eparchial Priests' Conference |
| 19 | Wed | | Bishop's House: Eparchial Curia meeting |
| 20 | Thu | | Bishop's House |
| 21 | Fri | | Bishop's House |
| 22 | Sat | 06.30 am | Minor seminary: Holy Qurbana and Inauguration of Academic Year |
| 23 | Sun | 02.00 pm | Kalluvilai : CML Annual Day |
| 24 | Mon | 04.00 pm | Shenkottai: Mission meeting |
| 25 | Tue | 10.00 am | Kanjirapally : Inter Diocesan Meeting |
| 26 | Wed | 09.30 am | Bishop's House : Eparchial Curia Meeting |
| 27 | Thu | 02.00 pm | Bishop's House : Inter Departmental Meeting |
| 28 | Fri | 05.00 pm | Padanthalumoodu : Feast Day Holy Qurbana |
| 29 | Sat | 10.30 am | Mukkoottukal : Sacred Heart Feast Holy Qurbana |
| | | 03.30 pm | Vazhuthakadu : Marriage Qurbana |
| 30 | Sun | | |

Fr. Sajan Nettaponghu
Bishop's Secretary

## இடமாற்றங்கள்

ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட அருட்தந்தையர்களுக்கான பணியிட மாற்றம் 2019 மே மாதம் 24 ஆம் தேதி அன்று நடைமுறைக்கு வந்தது.





26 MAY 2019 ST. VINCENT DE PAUL
ANNIVERSARY | CHRISTURAJAPURAM



20 MAY 2019 BLESSING OF CHF CONVENT
KAMARAJ NAGAR




29.05.2019 | SILVER JUBILEE
OF ST.MARY'S HEALTH CENTER
VATTAKOTTAI

25 MAY 2019 **SPARK**
EDUCARE RESIDENTIAL
CAMP
SANGAMAM





For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570